இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 21.01.2026

# வாக்குறுதிகளை மறந்த பழனிசாமி!

திராவிட முன்னேற்றக் கழகம் வாக்குறுதி தந்தால் நிறைவேற்றும் என்பதை மெய்ப்பித்துள்ளது. இது மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்துள்ளது. எனவே, தி.மு.க. சொல்வதற்கு முன்னால் வாய்க்கு வந்ததைச் சொல்லி வைப்போம் என்று பொய் மூட்டைகளை வாக்குறுதிகளாக அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

**அ.தி.மு.க. தனது ஆட்சி காலத்தில் எந்த வாக்குறுதி களையும் நிறைவேற்றாத கட்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள்.**

**2011 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டவை பழனிசாமிக்கு நினைவில் இருக்கிறதா?**

★ சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோர சாலைத் திட்டம்.

★ தென் தமிழகத்தில் ‘ஏரோ பார்க்’.

★ ஆன்லைன் வர்த்தகம் தடுக்கப்படும்.

★ 10 ஆடை அலங்காரப் பூங்காக்கள்.

★ திருப்பூர் சாயக் கழிவுகளைச் சுத்திகரிக்க விஞ்ஞானக் கழிவு அகற்றும் நிலையம்.

★ 58 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பஸ் பாஸ்.

★ மின்னணு ஆளுமையின் கீழ் அனைத்துக் காவல் நிலையங்கள்.

★ விவசாயிகளைப் பங்குதாரர்களாகக் கொண்ட 6 ஆடை அலங்கார சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.

★ பள்ளிகளில் தாய்மொழியோடு பிறமொழிகள் பயில சிறப்புப் பயிற்சிகள்.

★ நீதிமன்றங்களில் தமிழ்மொழி.

★ தமிழில் படித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.

★ வனவிலங்குகள் குடியிருப்பு, விவசாய நிலங்களுக்குள் புகுவதைத் தடுக்க நடவடிக்கை.

★ தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை இரண்டு மடங்காக்குவோம்.

★ மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்.

**இவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை பழனிசாமியின் ‘அம்மா’ ஜெயலலிதா ஆட்சியில்!**

★ அமெரிக்க சுதந்திர தேவி சிலை போல ரூ.100 கோடியில் மதுரையில் தமிழ்த்தாய்க்கு சிலை அமைக்கப்படும் சட்டமன்ற விதி 110ன் கீழ் அறிவிப்பை 2013 மே 14ம் தேதி வெளியிட்டார் முதல்வர் ஜெயலலிதா. தமிழ்த் தாயையே ஏமாற்றினார்கள்.

**2016 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதாவது பழனிசாமிக்கு நினைவில் இருக்கிறதா?**

★ அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் செல்போன் விலையின்றி வழங்கப்படும்.

★ பெரிய பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில், இலவச ‘வைபை’ இணையதள வசதி வழங்கப்படும்.

★ அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அம்மா இரு சக்கர வாகன பழுது பார்க்கும் பயிற்சி மையம் உருவாக்கப்படும்.

★ வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அம்மா ஸ்கூட்டர் வழங்கப்படும்.

★ ஆதி திராவிடர் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்களும் நீராவி இட்லி குக்கர்களும் வழங்கப்படும்.

★ நரிக்குறவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

★ ’அம்பேத்கர் கொள்கையை பரப்ப ரூ.5 கோடியில் அம்பேத்கர் பவுண்டேஷன் நிறுவப்படும்.

★ அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 6 தலைமை அரசு மருத்துவமனைகளிலும் கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் ரூ.10 கோடியில் உருவாக்கப்படும். **இப்படிச் சொன்னது எதையும் செய்ய வில்லை.**

**தனது சொந்த மாவட்டமான சேலம் மாவட்டத்துக்கு பழனிசாமி கொடுத்த வாக்குறுதிகளையாவது செய்தாரா? இல்லை.**

சேலம் - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட தகவல் தொழில் நுட்பப் பூங்கா பணிகளை முடக்கி வைத்திருந்தார். திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை முடக்கினார். பாதாளச் சாக்கடை திட்டத்தை முறையாகச் செயல்படுத்தவில்லை. ஏற்காடு தாவரவியல் பூங்காவை முறையாக அமைக்கவில்லை. சேலம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை மேம்படுத்தவில்லை. சேலம் மாநகர எல்லைப் பகுதிகளை இணைக்கும் ரிங் ரோடு அமைக்கப்படும் என்றார் பழனிசாமி. அமைக்கவில்லை. தலைவாசல் சந்தை விரிவாக்கம் செய்யப்படவில்லை. ஓமலூரில் திரவிய தொழிற்சாலை அமையவில்லை. எடப்பாடி, வீரபாண்டி தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமையவில்லை. சேலத்தில் ராணுவத் தளவாடத் தொழிற்சாலை அமையப் போகிறது என்றார்கள். அமையவில்லை. சேலம் செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட் மேம்படுத்தப்படவில்லை. இவை அனைத்தும் பழனிசாமி கொடுத்த வாக்குறுதிகள் தான். தனது சொந்த மாவட்டத்துக்குக் கூட சொன்னதைச் செய்யாதவர் தான் பழனிசாமி.

**தனது சொந்தத் தொகுதிக்கு கொடுத்த வாக்குறுதியையாவது நிறைவேற்றினாரா பழனிசாமி என்றால் அதுவும் இல்லை.**

1. எடப்பாடி தொகுதியில் ஜவுளிபூங்கா
2. நெருஞ்சிப்பேட்டையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம்
3. கொங்கணாபுரத்தில் தொழில்பேட்டை
4. மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரி நீர் பயன்பாடு
5. எடப்பாடி அரசு மருத்துவமனை மேம்பாடு
6. கொங்கணாபுரம் கூட்டுறவு வங்கி விவகாரம்
7. மின் மயானங்கள்
8. தேங்காய், மா.பருத்தி, மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றுக்கு ஆதார விலை
9. பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம்
10. நிலக்கடலை விவசாயிகளுக்கு தனிகூட்டுறவு சங்கம்

**இப்படி தனது தொகுதியையும் தனது மாவட்டத்தையும், தமிழ்நாட்டையும் மொத்தமாக ஏமாற்றிய பழனிசாமியை அவரது தொகுதி மக்களும், மாவட்டத்து மக்களும் தமிழ்நாடும் ஏற்காது.**

வாக்காளர் பட்டியல்: பெயர் சேர்த்தல், நீக்கல் சிறப்புத் தீவிரத் திருத்தங்கள்!

# சென்னையில் 24, 25 தேதிகளில் சிறப்பு முகாம்கள்!

## ஜன.30 வரை நீட்டிப்பு!

சென்னை, ஜன.21

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, வரைவு வாக்காளர் பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் 19.12.2025 முதல் 18.01.2026 வரை என கால அவகாசம் நிர்ணயிக் கப்பட்டிருந்தது.

இந்திய தேர்தல் ஆணையமானது தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, வாக்காளர் பதிவு விதிகள், 1960 இன் விதி 12இன் உபவிதியின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிரத் திருத்தத்தின் பொருட்டு, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் காலம் 30.01.2026 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

அதன் அடிப்படையில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் கால அவகாசம் 30.01.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில், தகுதியுள்ள குடிமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, வருகின்ற 24.01.2026 (சனிக்கிழமை) மற்றும் 25.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்களிலும் சென்னை மாவட்டத்தில் உள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத குடிமக்கள் மற்றும் 18 வயது நிரம்பிய தகுதியுடைய குடிமக்கள் படிவம்–6ஐ உறுதிமொழி படிவத்துடன் (Declaration Form) சமர்ப்பித்து தங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

மேலும், ஒரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு வாக்காளரும், முன்மொழியப்பட்ட சேர்க்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள பெயரை நீக்க கோரவோ படிவம்–7 மூலம் விண்ணப்பிக்கலாம்.

முகவரி மாற்றுதல் / ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) மாற்றம் செய்ய / மாற்றுத்திறனாளி (PwDs) வாக்காளர்கள் என குறிப்பது ஆகிய கோரிக்கை உடையவர்கள் படிவம்–8 மூலம் விண்ணப்பிக்கலாம்.

வாக்காளர்கள் அனைவரும், இந்த நீட்டிக்கப்பட்ட கால அவகாசத்தைப் பயன்படுத்தி, வாக்காளர் பட்டியல் தொடர்பான ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகளை உரிய முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களின் பிறந்த நாளையொட்டி நேற்று (20.1.2026) தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவருக்கு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

# பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

இயங்குகின்ற இப்பேரவையின் புகழ் மங்கிடாத வகையில் பாதுகாத்து வந்த சான்றோர்களின் வழித்தடத்தினைப் பின்பற்ற வேண்டிய கடமை நமக்கு உள்ளது. வரலாற்றுப் பெருமை கொண்ட இப்பேரவையின் மாண்பினைப் பாதுகாக்க வேண்டிய முதல் பொறுப்பு எனக்கு உள்ள காரணத்தால், கீழ்க்காணும் தீர்மானத்தை பேரவைத் தலைவர் அவர்களின் இசைவோடு, சட்டமன்றப் பேரவை விதி 17ஐத் தளர்த்தி, முன்மொழிந்திட அனுமதி கோருகிறேன். (பேரவைத் தலைவரால் அனுமதி வழங்கப்பட்டது.)

**தீர்மானம்**

**“ஏற்கெனவே உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்ட ஆளுநர் உரையைப் பேரவையில் படிக்காமல் ஆளுநர் அவர்கள் சென்றுள்ளதை இப்பேரவை ஏற்கவில்லை. ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட, சட்டமன்ற உறுப்பினர்களின் மேசையில் உள்ள கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆளுநர் உரையின் ஆங்கில மொழியாக்கம் இங்கே ஆளுநர் அவர்களால் படிக்கப்பட்டதாக இப்பேரவைக் கருதுகிறது. அவ்வாறே அவைக் குறிப்பில் நடவடிக்கைக் குறிப்புகள் இடம் பெறலாம்.**

**மேலும், மரபுவழி நிகழ்வுகள், பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப்பெறவுள்ள ஆளுநர் உரையின் தமிழாக்கம் மற்றும் நான் முன்மொழிகின்ற தீர்மானம், அதன் முடிவு ஆகியவை மட்டும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாம்”**

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். இந்தத் தீர்மானத்தை அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

(பின்னர், மேற்படி தீர்மானம் அவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.)

## கோவை – உதகை – குண்டல்பேட்

# தேசிய நெடுஞ்சாலை பராமரிப்புக்கு ரூ.8698.88 கோடி ஒதுக்கீடு!

## ஆ.இராசா எம்.பி. கோரிக்கையை ஏற்று ஒன்றிய அமைச்சர் நிதின் கட்காரி உத்தரவு!

உதகை, ஜன. 21-

கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதியில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நெடுஞ்சாலைத் திட்டங்களை நிறைவேற்றக் கோரி நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்கள் மத்திய தரைவழி போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் L &T பைபாஸ் சாலை முதல் கோவை நகரம், மேட்டுப்பாளையம், குன்னூர், ஊட்டி, கூடலூர் வழியாக கர்நாடகாவின் குண்டல்பேட்டை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் (NH-181) பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நடப்பு நிதியாண்டில் ரூ. 8698.88 லட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி ஆ.இராசா அவர்கள் கடந்த 10.12.2025 அன்று மத்திய தரைவழி போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களை நேரில் சந்தித்தார்.



அப்போது, ஊட்டிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருவதாலும், பயணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், கோவை, ஊட்டி, பெங்களூரு மற்றும் மைசூரை இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய நெடுஞ்சாலையில் (NH-181) உடனடியாக பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அமைச்சரிடம் நேரில் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்கள் 15.01.2026 அன்று நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், ஆ.இராசா அவர்களின் கோரிக்கையினை ஏற்று, கோயம்புத்தூர் ஊட்டி குண்டல்பேட் தேசிய நெடுஞ்சாலையில் (NH-181) உடனடியாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள துறை ரீதியான தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் நிதி அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**ஆ.இராசா மனமார்ந்த நன்றி!**

தனது கோரிக்கையினை ஏற்று, கோயம்புத்தூர் ஊட்டி குண்டல்பேட் தேசிய நெடுஞ்சாலையில் (NH-181) உடனடியாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உரிய அனுமதி அளித்த மத்திய தரைவழி போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களுக்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா அவர்கள் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

8 லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு மறுக்கப்பட்டு வரும்

# நிதி சார்ந்த நீதியை ஒன்றிய அரசு உடனே வழங்க முன்வர வேண்டும்!

## பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்கக் கட்டமைப்பு வலியுறுத்தல்!

*திருவாரூர், ஜன.21*

எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு கடந்த 18 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வரும் நிதி சார்ந்த நீதியை தாமதமின்றி வழங்க இந்திய அரசும் வங்கி நிர்வாகங்களும் முன் வரவேண்டும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கட்டமைப்பு வலியுறுத்துகிறது.

கடந்த 2008-ஆம் ஆண்டு வங்கித்துறை ஓய்வூதியர்கள் மத்தியில் சமநீதி வேண்டி உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட எம்.சி.சுக்லா வழக்கில் 18 ஆண்டுளைக் கடந்த பின்னரும் வெளிப்படுத்தப்படும் அதீத காலதாமதம் எட்டு லட்சம் வங்கி ஓய்வுதியர்கள் மத்தியில் கலக்கத்தையும் கவலையையும் உருவாக்கி உள்ளது. வாழ்நாள் முழுமையும் பொதுத்துறை வங்கிகளின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டு உழைத்த வங்கி ஓய்வுதியர்கள் சமூகக் கழிவாக (Social Waste) கருதப்பட்டு விடக்கூடாது.

ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா, நபார்டு மற்றும் மத்திய மாநில அரசின் ஓய்வூதியர்களுக்கு ஒவ்வொரு ஊதிய ஒப்பந்தத்தின் போதும் ஓய்வூதியம் சீரமைக்கப்பட்டு (PENSION UPDATION) வழங்கப்பட்டு வருகிறது.

வங்கித்துறையில் கணிசமான அளவு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வுதிய சீரமைப்பை எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு மறுப்பது அரசியலமைப்பின் 14வது பிரிவுக்கு எதிரானது (UNEQUAL TREATMENT TO EQUALS) என்ற கருத்தை அரசும், வங்கி நிர்வாகங்களும் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

பொதுத்துறை வங்கிகளின் பென்சன் கையிருப்பு ஏறத்தாழ 4,56,424 கோடி இருக்கும் போது ஓய்வூதிய சீரமைப்பை எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கும் தாமதமின்றி வழங்க முன்வர வேண்டும்.

கடந்த 2024 ஆண்டு மார்ச் மாதம் வங்கித்துறையில் கையெழுத்தான இருதரப்பு ஊதிய ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ExGralia கடந்த இரண்டு ஆண்டுகளாக பரிசீலனை செய்து உயர்த்தி வழங்காத வரலாற்று அநீதியை தாமதமின்றி களைய வேண்டும்.

கடந்த 1997க்கு முன்னர் ஓய்வு பெற்றோருக்கு அளிக்கப்பட்டு வரும் சொற்ப ஓய்வுதியமும், 2002-ஆம் ஆண்டுக்கு முன்னர், ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பஞ்சப்படியில் உள்ள பாதகமான முரண்பாடுகளையும் தாமதமின்றி களைய அரசும் வங்கி நிர்வாகங்களும் முன் வர வேண்டும்.

விண்ணை முட்டும் விலைவாசி, மலைக்க வைக்கும் மருந்துகளின் விலை, அச்சத்தை ஊட்டும் சிகிச்சை செலவுகள், நாளும் உயர்ந்து வரும் நோய்களின் எண்ணிக்கை ஆகியவற்றை தளர்ந்த உடலோடு தள்ளாத வயதில் எதிர்கொள்ள முடியாமல் நிலை குலைந்து நிற்கும் அறிவார்ந்த மூத்த தலைமுறையினருக்கு நிதி சார்ந்த நீதியை வழங்கி வங்கித்துறையில் மறுமலர்ச்சியையும், நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் பெற இந்திய அரசும், இந்திய வங்கிகள் நிர்வாகமும் முன்வரவேண்டு மென பாரத ஸ்டேட் பேங்கின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கட்டமைப்பு (AFCCOM) வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அந்தச் சங்கம் சார்பில் எஸ்.பி. இராமன் (தலைவர்), எம்.கே.மூர்த்தி (செயலாளர்) ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தி உள்ளனர்.




திருவண்ணாமலை, அருணை தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில், பொதுப்பணித்துறை அமைச்சரும், அதன் தலைவருமான எ.வ.வேலு தலைமையுரையாற்றினார். உடன் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், வே.ஆல்பர்ட், எ.வ.குமரன், அஷ்ரார்ஜமாலுதீன் உட்பட விருது பெற்றவர்கள் உள்ளனர்.